இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

***************

**ஊடக அறிக்கை**

**இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டுநிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக இந்திய விமானப்படைத் தளபதி ஏர் சீப் மார்ஷல் ராகேஷ் குமார் சிங் பதாரியா வருகை**

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டங்களை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல்வேறு நிகழ்வுகளும் அதேபோல ஐந்தாம் படையணி மற்றும் ஹெலிகொப்டர் பிரிவின் ஆறாம் படையணி ஆகியவற்றுக்கான ஜனாதிபதி விருதுகளை வழங்கும் நிகழ்வுகளும் 2021 மார்ச் 2 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இந்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இந்திய விமானப்படைத் தளபதி ஏர் சீப் மார்ஷல் ராகேஷ் குமார் சிங் பதாரியா PVSM, AVSM, VM அவர்கள் 2021 மார்ச் 3 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தார்.

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு காலிமுகத்திடலில் நடைபெறும் வான் சாகசங்களை அவர் பார்வையிடுவதுடன் இந்த நிகழ்வுகளில் இலங்கை ஜனாதிபதி கோதாபய ராஜபக் ஷ அவர்களும் கலந்து கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும் . அத்துடன் இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் தோழமை, கூட்டொருமைப்பாடு ஆகியவற்றை வெளிக்காண்பிக்கும் முகமாக இந்திய விமானப்படை மற்றும் இந்திய கடற்படையினர் இந்த வான் சாகச நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையில் பகிரப்பட்டிருக்கும் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் வலுவான உறவு ஆகிய வற்றை இந்த விஜயம் எடுத்தியம்புகின்றது. இந்த விஜயத்தின்போது பொதுவான பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் பரஸ்பர தொடர்புகள் குறித்து விவாதிக்கப்படும். இந்த சகல நிகழ்வுகளும் கொவிட் கட்டுப்பாடுகளை பின்பற்றி

நடத்தப்படும். அத்துடன் இந்தியாவினால் இலங்கைக்கு முதல் முன்னுரிமை அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இந்திய விமானப்படை தளபதியின் விஜயமானது இரு நாடுகளுக்கும் இடையில் வளர்ந்துவரும் தோழமை மற்றும் நட்புறவு ஆகியவற்றை பிரதிபலிப்பதாக அமைகின்றது.

**************

கொழும்பு

03 மார்ச் 2021